

ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் சு.முத்துசாமிக்கு காங்கிரஸ் மூத்த தலைவரும், முன்னாள் மத்திய நிதியமைச்சருமான ப.சிதம்பரம் அவர்கள் சூரம்பட்டி பஸ் ஸ்டாப் பகுதியில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை எடுத்து கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். வாக்கு சேகரிப்பில் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் நாமக்கல் கிழக்கு மாவட்டம் ராசிபுரம் சட்டமன்றத் தொகுதியில், தி.மு.க. வேட்பாளரும், அமைச்சருமான மருத்துவர் மா.மதிவேந்தன் ராசிபுரம் நகரில் ஜாமியா மஜித், அச்சுகட்டித் தெரு தர்கா உள்ளிட்ட பகுதிகளில் தொழுகைக்கு வந்திருந்த இஸ்லாமியர்களைச் சந்தித்தும், இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்களில் பெண்களிடம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ‘திராவிட மாடல்’ ஆட்சியின் சாதனைகளை விளக்கும் துண்டு பிரசுரங்கள் வழங்கி வாக்கு சேகரித்தார். இந்நிகழ்ச்சியில் ராசிபுரம் நகர தி.மு.க. செயலர் என்.ஆர். சங்கர் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### இது ஒரு கருப்புச் சட்டம்! சூழ்ச்சியை உள்ளடக்கியது! எனவே ஒன்றிய பா.ஜ.க. அரசு

# தொகுதி மறுவரையறை திருத்தச் சட்டத்தை மொத்தமாக திரும்பப்பெற வேண்டும்!

## தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் மீண்டும் வலியுறுத்தல்!

**சென்னை, ஏப்.19-**

**தொகுதி மறுவரையறைச் சட்டத் திருத்தத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு மொத்தமாகத் திரும்பப் பெற வேண்டும் என தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தினார்.**

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் காலை, (நாடாளுமன்றத்தில் ‘தொகுதி மறுவரையறை மசோதா’ தோற்கடிக்கப்படும் முன்னர்) தமது ட்விட்டர் பதிவில் கூறியிருந்ததாவது:-

தமிழ்நாட்டின் அரசியலுக்கு மிக முக்கியமான நாள் இன்று. தொகுதி மறுவரையறைக்கு எதிரான நம் போராட்டங்களின் முடிவினை அறியப் போகும் நாள்.




**பிரதமரின் சொல் ஒன்று செயல் வேறாக உள்ளது !**

நம்முடைய கடும் எதிர்ப்பினையும் போராட்டத்தினையும் தொடர்ந்து, தொகுதி மறுவரையறையால் தமிழ்நாட்டின் தொகுதி அளவு குறையாது என மாண்புமிகு பிரதமர் அவர்களும் உள்துறை அமைச்சர் அவர்களும் நேற்று நாடாளுமன்றத்தில் வாய்மொழி உத்தரவாதம் அளித்துள்ளனர்.

ஆனால், சொல் ஒன்று - செயல் வேறு என்பதாக, இவர்கள் தாக்கல் செய்துள்ள சட்டமுன்வடிவு முழுக்க முழுக்க ஏமாற்றுத் திட்டமாக இருக்கிறது. இதை நம்பவும் முடியாது, ஏற்றுக்கொள்ளவும் முடியாது எனத் திட்டவட்டமாக நிராகரிக்கிறோம்.

**கருப்புச் சட்டத்தின் சூழ்ச்சி!**

இந்தச் சட்டமுன்வடிவில் தொகுதி மறுசீரமைப்பு ஆணையத்துக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மூலம், இவர்கள் நினைத்தால் நினைத்த நேரத்தில், நினைத்த முறையில், எப்போது வேண்டுமானாலும் எதிர்காலத்தில், இவர்களுக்குச் சாதகமான வகையில், இந்திய மாநிலங்களின் தொகுதி யளவை மாற்றியமைத்துக் கொள்வதற்கான வழிவகைகள் இந்தக் கருப்புச் சட்டத்தில் இடம்பெற்றுள்ளன. பெரும் சூழ்ச்சியை உள்ளடக்கியதாக இந்தச் சட்டமுன்வடிவு இருக்கிறது.

அவசரகதியில் இதனை நிறைவேற்றக் கூடாது. ஒன்றிய அரசு இதனை முழுவதுமாகத் திரும்பப் பெற வேண்டும். எண்ணிக்கை பலம் இருக்கிறது என்ற திமிரில், எங்களின் எதிர்ப்பை மீறி இதனை நிறைவேற்றினால், அதற்கான விளைவுகளைத் தமிழ்நாட்டில் நீங்கள் சந்திக்க வேண்டியிருக்கும்.

**ஒன்றிய ஆட்சியாளர்கள் மாநில உரிமைகளை நொறுக்கப் பார்க்கிறார்கள்!**

நேரு அவர்கள் இந்தியைத் திணிக்க மாட்டோம் என்றார், இருந்தவரை அந்த உறுதி மொழியைக் காப்பாற்றினார். ஆனால், தற்போதைய ஒன்றிய ஆட்சியாளர்களோ மாநில உரிமைகளைக் காப்பாற்றுவோம் எனச் சொல்லிக்கொண்டே அதனைச் சில்லு சில்லாக நொறுக்கும் வேலையில் ஈடுபடுகின்றனர்.

**தமிழ்நாட்டின் குரலுக்கு செவிசாய்த்தே ஆக வேண்டும்!**

நாம் கோருவது, முன்னாள் பிரதமர்கள் இந்திரா காந்தி அவர்களும், வாஜ்பாய் அவர்களும் அரசியலமைப்புச் சட்டத்திலேயே திருத்தம் செய்து, 25 ஆண்டுகளுக்குத் தொகுதி மறுசீரமைப்பை நிறுத்தி வைத்ததைப் போன்ற சட்டப் பாதுகாப்பு.

**Withdraw Delimitation Bill;**

தமிழ்நாட்டின் குரலுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு செவிசாய்த்தே ஆக வேண்டும்!

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

### தமிழக முதலமைச்சரின் போர்க்குரல்

# இந்திய மக்களின் இதயக் குரலாக எதிரொலித்திருக்கிறது!

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் அறிக்கை!

*திருச்சி, ஏப். 19 -*


தமிழக முதலமைச்சரின் போர்க்குரல் இந்திய மக்களின் இதயக் குரலாக நாடாளுமன்றத்தில் எதிரொலித்திருக்கிறது என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் தெரிவித்தார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் 18.4.2026 சனிக்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் கூறியதாவது :

2026 ஏப்ரல் 17 வெள்ளிக்கிழமை, இந்திய ஜனநாயக சரித்திரத்தில் பொன்னெ முத்துகளால் பொறிக்கப்பட்டு, காலா காலத்திற்கு நினைவு கூர்ந்து போற்றும் தினமாக மாறியிருக்கிறது.

இந்தியாவின் ஜனநாயக மாடலாகத் திகழும் மக்களவையில் தொகுதி மறுவரையறை மசோதா தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. மத்தியில் ஆளும் பாசிச பாரதீய ஜனதா கட்சி அரசின், ஜனநாயக விரோத மான, மாநிலங்களின் உரிமைகளைத் தகர்த் தெறிய முயன்ற கருப்புச் சட்டம் தொகுதி மறுவரையறை மசோதா, மூன்றில் இரு பங்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரிக்க முன் வராததால் மோடி அரசின் கறுப்பு மசோதா புதைகுழிக்குள் தள்ளப்பட்டு விட்டது. இந்தியா கூட்டணியினரின் ஏகோபித்த எதிர்ப்பு, மக்களின் வெற்றிக்குப் பெரும் உதவி புரிந்திருக்கிறது.

ஒன்றிய அரசின் ஓரவஞ்சனையான தொகுதி மறுவரையறை மசோதா, மாநிலங்களின் உரிமைகளுக்கு வேட்டு வைக்கும் முயற்சி என்றும், தென் மாநிலங்களை இரண்டாந்தர குடிமக்களாக மாறும் சதிவலை என்றும், மாநிலங்களின் கட்டமைப்புகளை உடைத்துச் சிதைத்து புதிய மாநிலங்களைஉருவாக்கும் சதித் திட்டம் என்றும் போர்க்குரல் எழுப்பிய பெருமை தங்கத் தமிழகத்தில் பொங்கு புகழ் பெற்று வரும் திராவிட மாடல் நல்லாட்சி நாயகர் தமிழ்நாட்டு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களையே சாரும்: இந்திய நாடாளுமன்றத்தில் தொகுதி மறுவரையறை மசோதா தோற்கடிக்கப்பட்டது, தமிழக முதலமைச்சர் அவர்களுக்குக் கிட்டி யிருக்கும் கெட்டியான முதல் வெற்றி என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. தமிழகத்தில் இருந்து எழுந்த போர்க்குரல் இந்திய மக்களின் இதயக் குரலாக நாடாளுமன்றத்தில் எதிரொலித்திருக்கிறது. இந்திய அரசியலில் தமிழ்நாடு என்றும் போல் நேர்வழி காட்டியிருக்கிறது



என்பது நிரூபனமாகி இருக்கிறது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கித் தந்து போன நமது முன்னோர்களின் தூர நோக்குப் பார்வை எத்துணை அளவு உயர்தது, சிறந்தது, எல்லாக் காலங்களுக்கும் நல்வழி காட்டக் கூடியது என்பதை உணர்த்தும் விதமாக அரசியல் அமைப்புச் சட்ட விதிகள் அமைந்திருக்கின்றன. அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தம் வேண்டுமெனில் மூன்றில் இருபங்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருக்க வேண்டும் என்று வழிவகுத்திருக்கிறார்கள். இது எத்தனை உயர்வான முன்யோசனை என்பதை இன்று நாடு உணர்கிறது. அறிஞர் அம்பேத்கார் உள்ளிட்ட அறிஞர்கள் எத்தகைய சிறப்பான அரசியல் அமைப்புச் சட்டத்தை நமக்கு வழங்கி இருக்கின்றனர் என்று வியந்து பாராட்ட வேண்டியவர்களாக நாட்டு மக்கள் இருக்கிறோம். இந்தியாவின் தனிப்பெரும் சிறப்பு, பன்முகதன்மை, சமத்துவம், சமூக நீதி, வேற்றுமையில் ஒற்றுமை ஆகிய கோட்பாடுகளில் இருக்கிறது. அதனால தான் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை பாதுகாப்பது ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் கட்டாயக் கடமை என்று அறிஞர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். இத்தகைய மேன் மக்களின் ஒட்டு மொத்தக் குரலாக இன்றைக்குத் தமிழ்நாட்டு முதலமைச்சர் திராவிட மாடல் நல்லாட்சி நாயகர் தளபதி மு.க.ஸ்டாலின் திகழ்கிறார்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்கவும், ஜனநாயகத்தை நிலைநிறுத்தவும், மாநிலங்களின் உரிமைகளை நிலை நாட்டவும், சமூக நீதி, சகோதரத்துவம், சமயச் சார்பின்மை ஆகியவற்றைக் கடைப்பிடிக்கவும், தமிழகத்தின் தனிப்பெருமையை தரணி எங்கும் பரப்புரை செய்யவும் ஸ்டாலின் தொடரட்டும் ! தமிழகம் வெல்லட்டும் ! நாளைய வரலாறு இந்தப் பெருமையை நாள் எல்லாம் சொல்லட்டும் !

இவ்வாறு பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

### “திட்டங்களை எடுத்துரைத்தாலே வெற்றி உறுதி!”

# திருவெறும்பூர் தொகுதியில் - அன்பில் மகேஸ் பொய்யாமொழி தீவிர வாக்கு சேகரிப்பு!

*திருவெறும்பூர், ஏப். 19-*

“எதிர்க்கட்சியினர் நம்மைத் திட்டி வாக்கு கேட்டாலும், நமது முதலமைச்சர் தீட்டிய திட்டங்களை மக்களிடம் எடுத்துரைத்தாலே நமது வெற்றி உறுதி” என திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசினார்.

**தீவிர வாக்கு சேகரிப்பு**

திருவெறும்பூர் தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட சூரியூர் மற்றும் காந்தலூர் ஊராட்சிகளில் உள்ள வீரம்பட்டி, சின்ன சூரியூர், பெரிய சூரியூர், எலந்தப்பட்டி, கும்பக்குடி மற்றும் எம்.ஜி.ஆர் நகர் ஆகிய பகுதிகளில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேற்று தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

**ஜல்லிக்கட்டு பெருமையும் வளர்ச்சிப் பணிகளும்**

அப்போது பொதுமக்கள் மத்தியில் அவர் உரையாற்றியதாவது:

சூரியூர் பெருமை: தமிழகத்தில் எங்கு பேசினாலும் எனது தொகுதிக்கு உட்பட்ட சூரியூர் கிராமத்தின் ஜல்லிக்கட்டு பெருமையைப் பேசுவேன். தமிழக துணை முதலமைச்சரும் திருச்சி ஜல்லிக்கட்டு என்றால் அது சூரியூர் தான் எனக் குறிப்பிடுவார். இந்த ஜல்லிக்கட்டு மைதானத்தை



அடிக்கல் நாட்டி நமக்கு திறந்து வைத்தவரும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தான் விளைவாகவே தமிழகத்தின் இரண்டாவது ஜல்லிக்கட்டு மைதானம் இங்கு அமைக்கப்பட்டுள்ளது.

**நிதி ஒதுக்கீடு:**

கடந்த 2021 முதல் 2026 வரையிலான திராவிட மாடல் ஆட்சிக் காலத்தில், சூரியூர் ஊராட்சியில் மட்டும் சுமார் 6 கோடியே 21 லட்சத்து 25,501 மதிப்பீட்டில் சாலைகள், சமுதாயக் கூடம், சீரணி அரங்கம், சிறு பாலங்கள் மற்றும் குளம் சீரமைப்பு என எண்ணற்ற பணிகள் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

**மக்கள் நலத் திட்டங்கள்**

நீங்கள் அளித்த வாக்கினால் தான் தமிழகம் முழுவதும் பின்வரும் திட்டங்கள் சாத்தியமானது என அவர் பட்டியலிட்டார்:

மகளிர் உரிமைத் தொகை & விடியல் பயணம் (இலவச பேருந்து வசதி).

இல்லம் தேடி கல்வி & காலை உணவுத் திட்டம்.

நான் முதல்வன் திட்டம்.

உங்களுடன் ஸ்டாலின் & நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்கள்.

“எதிர்க்கட்சியினர் நம்மைத் திட்டமிட்டு திட்டி வாக்கு கேட்கிறார்கள். ஆனால் நாம் யாரையும் திட்டி வாக்கு கேட்க வேண்டிய அவசியமில்லை. தமிழக முதலமைச்சர் தீட்டிய (டி.டி.டி திட்டங்கள்) மக்கள் நலத் திட்டங்களை எடுத்துச் சொன்னாலே போதும்.”

**மூன்றாவது முறையாக ஆதரவு கோரிக்கை**

தன்னுடைய சொந்தத் தொகுதியான திரு வெறும்பூரில் உங்கள் வீட்டுப் பிள்ளையாக மூன்றாவது முறை களம் காண்பதாகக் குறிப்பிட்ட அவர், உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெரும் வாக்கு வித்தியா சத்தில் தன்னை வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் திருவெறும்பூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் கும்பக்குடி கங்காதரன், ஒன்றிய இளைஞரணி செயலாளர் பழங்கனாங்குடி சுதாகர் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர்.



பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர், மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் அரியகுளம், மோட்டுப்பட்டி, புழுதிகரை, மாரவாடி உள்ளிட்ட 20 கிராமங்களில் தி.மு.க. தேர்தல் அறிக்கையினை விளக்கி கூறி பொதுமக்களிடையே வாக்கு சேகரித்தார். உடன் முன்னாள் எம்.எல்.ஏ கே.மனோகரன், ஒன்றிய செயலாளர் பிரபு ராஜசேகரன், ஐஸ் சிவா, லட்சுமணன், பாலாஜி,திராவிடர் கழகம் ஊமை ஜெயராமன், தமிழ்செல்வி மற்றும் கூட்டணி கட்சியினர் பங்கேற்றனர்.